**Dina Malar, Coimbatore, Aug 28 2012**

# 'டி.சி.எஸ்., ஐ.டி விஸ் 2012

கோவை, ஆக. 28 -

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டி.சி.எஸ்.,) சார்
பில், 'டி.சி.எஸ்., ஐ.டி விஸ் 2012' எனும், பள்ளி
களுக்கிடையேயான போட்டி, ஆர்.எஸ். புரம்
மாநகராட்சி கலையரங்கில், நடந்தது.

டி.சி.எஸ்., ஐ.டி விஸ் பிராந்திய சுற்றுகள் ஐத
ராபாத், அகமதாபாத், கோல்கட்டா, சென்னை,
கோவை, பெங்களூர் உள்ளிட்ட 14 நகரங்களில்
நடக்கிறது. டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள,
தேசிய இறுதிச் சுற்றுப்போட்டியில், 14 பிராந்திய
வெற்றியாளர்கள், ஐக்கிய அரபு 'எமிரேட்டின்'
வெற்றியாளர்களுடன் போட்டியிடுவர். வெற்றி
யாளர்கள் டி.சி.எஸ்., தலைமை செயல் அதிகாரி
சந்திரசேகரனுடன் தேனீர் அருந்துகின்றனர்.

நேற்று முன் தினம், கோவையில் நடந்த போட்
டியில், குன்னூர், காங்கேயம், கோத்தகிரி,
ஊட்டி, சேலம், பொள்ளாச்சி, பாலக்காடு உள்
ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 102 பள்ளி
கள் பங்கேற்றன. ஓர் அணிக்கு இருவர் என,
மொத்தம் 1,208 மாணவர்கள் பங்கேற்ற, 'க்விஸ்'
போட்டி ஆங்கிரி நெர்ட்ஸ், ஜி.டி.ஏ., அட்
டி.சி.எஸ்., மேக்ஸ் பெய்ன் மற்றும் டோட்டல்
கோம்பேட் என, ஐந்து சுற்றுகளாக நடந்தது.

இறுதிச் சுற்றில், அங்கப்பா சி.பி.எஸ்.இ.,
பள்ளி, சுகுணா பிப் பள்ளி, யுவ பாரதி பப்ளிக்
பள்ளி, புனித ஜோசப்ஸ் பப்ளிக் பள்ளி, ஜி.கே.டி.,
மெட்ரிக் பள்ளி, எஸ்.பி.ஓ.ஏ., மெட்ரிக் பள்ளி
கள் பங்கேற்றன. ஜி.கே.டி., மெட்ரிக் பள்ளி
மாணவர்கள் ஆதித்யன், ஆண்டோ பெலிக்ஸ்
சொட்விக்ஸ் ஆகியோர் 45 புள்ளிகள் பெற்று முத
லிடமும், யுவ பாரதி பப்ளிக் பள்ளி மாணவர்கள்
அதியஷேகிரன், ரியாடேனியல் ஆகியோர் 40
புள்ளிகள் பெற்று இரண்டாமிடமும் பிடித்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு, மாவட்ட கலெக்டர்
கருணாகரன், டி.சி.எஸ்., மனிதவள பிரிவு துணைத்
தலைவர் கணேசன் ஆகியோர் பரிசுகள் வழங்கினர்.